International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# புறநானூற்றில் மகளிரின் வீரம்

**க. கவிதா** பதிவெண்: PUAD230360909
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழ் இலக்கியத்துறை, அரசு கலைக்கல்லூரி, தருமபுரி - 05

**முனைவர் ப. சி. சரவணன்**
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, அரசு கலைக்கல்லூரி
தருமபுரி - 05. பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது

**Abstract**

In Puram poetry, women are portrayed as heroic figures. They are depicted as Moodhinmagalir—noble women who, for the sake of their nation, sent their kinsmen-such as fathers, husbands, and sons-to war. Several poems highlight women as courageous individuals capable of serving as envoys to enemy kings. This article elucidates how women of the Sangam era possessed fearless hearts that enabled them to boldly admonish kings who failed to accord them due respect, while also distinguishing themselves as women of profound scholarly wisdom.

**Keywords:** Noble Matrons, Heroic Mothers, the Bittersweetness of Love, The Warrior Who Slew an Elephant, Fearless Womanhood.

**ஆய்வுச் சுருக்கம்**

புறப்பாடல்களில் பெண்கள் வீர மகளிர்களாக அறியப்படுகின்றனர். தனது தந்தை, கணவன், மகன் போன்ற உறவுகளை நாட்டிற்காக போருக்கு அனுப்பிய மூதின்மகளிராக பெண்கள் விளங்குகின்றனர். பெண்கள் பகையரசரிடமும் அஞ்சாது தூது சென்ற வீரமிக்கவர்களாக இருந்ததைப் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன. தன்னை மதிக்காத அரசனை இடித்துரைக்கும் அஞ்சாத நெஞ்சம் உடைய பெண்களாகவும், புலமை வாய்ந்தவர்களாகவும் சங்க மகளிர் விளங்கியதை இக்கட்டுரை நிறுவுகிறது.

**முதன்மைச் சொற்கள்:** மூதின்மகளிர், மூதின் வீரத்தாய், இன்பவருத்தம், களிறெறிந்த காளை, அஞ்சாத பெண்மை.

**முன்னுரை**

பண்டைத் தமிழர் காதலையும், வீரத்தையும் தனது இரு கண்களாகப் போற்றி வாழ்ந்தனர். ஆண்களோடு பெண்களும் வீரத்தில் சிறந்து விளங்கினர். இப்பெண்கள் ஒவ்வொரு ஆணும் தனது நாட்டிற்காக போரிடுவதைக் கண்டு பெரிதும் மகிழ்வு கொண்டனர். சங்கமகளிர் சமூகம், அரசியல், தாய்மை முதலிய பலநிலைகளிலும் வீரவுணர்வுடன் விளங்கியமையை வெளிப்படுத்துவது இவ்வாய்வின் கருதுகோளாகும். பண்டைய பெண்சமூகம் இன்றைய பெண்களின் முன்னேற்றத்திற்கும், வீரம் முதலான ஆளுமைப் பண்புகளுக்கும் அடிப்படையாக விளங்கியதை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கம்.

**வீரக்குடி மகளிர்**

சங்கமகளிர் மூதின்மகளிர் என அழைக்கப் பட்டனர். மூதின்மகளிர் என்பது பழமையான குடியில் பிறந்த வீரமகளிர் என்று பொருள் கொள்ளப்படுகிறது. தனது புகுந்தவீட்டிற்கும், தான் பிறந்த குடிக்கும் புகழையும் பெருமை யையும் சேர்ப்பவர்களே இம்மூதின் மகளிர். சமூகத்தில் இவர்கள் புலவர்களாலும், அரசர்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டனர். வீரர்களுக்கு இணையாக இப்பெண்களும் பாடல் பெற்றுள்ளமை சமூகத்தில் பெண்மை யின் ஆளுமையை வெளிக்காட்டுகிறது. இவர்களின் வீரத்தைக் குறிப்பிட புறப் பொருட்துறையில் மூதின்முல்லை என்ற தனித்துறையே காணப்படுவதை,

**"அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்**

**மடவரன் மகளிர்க்கு மறமிகுத் தன்று"**[1]

என்று குறிப்பிடுகிறது. இதனோடு உவகைக் கலுழ்ச்சி போன்ற பிறதுறைகளும் பெண் களின் வீரம் குறித்து எடுத்துரைக்கின்றன. இதையே,

**"கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே;**

**மூதில் மகளிர் ஆதல் தகுமே;**

**.....ஒரு மகன் அல்லது இல்லோள்,**

**'செருமுகம் நோக்கி செல்க' என விடுமே!"**[2]

என்ற புறப்பாடல், நேற்றைக்கு முந்தைய நாள் போரில் தந்தையையும், நேற்றைய நாள் போரில் கணவனையும் இழந்தாள் மறக்குலப்பெண். இன்று போர்ப்பறை கேட்டதும் தனது இளமகனையும் போர்க்களம் நோக்கி செல்க என அனுப்பும் இந்த மூதின் மகளிரின் வீரம்போற்றுதலுக்குரியது. இதைப் பாடிய புலவரான ஒக்கூர் மாசாத்தியாரும் பெண்பாற்புலவரே என்பது இங்கு நோக்கத் தக்கது.

**புலிசேர்ந்து போகிய கல்அளை**

சங்ககாலத்தில் தாய் மகனைப் பெற்றெடுப்பதே, போர்க்களம் புகுந்து போரிட்டு நாட்டைக் காப்பதற்கே என்ற எண்ணம் மேலோங்கி காணப்பட்டது. ஒரு வீரத்தாய் உன்மகன் எங்கே இருப்பான் என கேட்டவருக்கு,

**"சிற்றில் நல்தூண் பற்றி, 'நின்மகன்**

**.....புலி சேர்ந்து போகிய கல்அளை போல,**

**ஈன்ற வயிறோ இதுவே;**

**தோன்றுவன் மாதோ, போர்க்களத் தானே!"**[3]

என்று கூறுவதிலிருந்து அத்தாயின் வீரமும், நாட்டுப்பற்றும், பெருமையும் புலப்படுகிறது. சங்கச்சமூகம் வீரத்தின் தலையூற்று என்பதை பலவகையிலும் தெளிவுபட புலப்படுத்து கின்றன புலவர்களின் பாடல்கள். தனது மகனைப் புலி என்றும், அவன் தங்கி இருந்து சென்ற வயிற்றைக் குகை என்றும் உவமித்து கூறுவது வீரத்தை பளிச்சென்று தெளிவுப் படுத்துவதாக அமைந்துள்ளது.

**முதியோர் சிறுவன்**

பழந்தமிழ் மகளிர் வீரமிக்க ஆண்மகனைப் பெறுவதில் உவகை கொண்டனர். ஒரு தாயானவள் தனது மகன் நன்றாக வாழ்வதைக் கண்டு மகிழ்ச்சி அடைவாள். இது உலக இயற்கை. ஆனால் இங்கு ஒரு தாயின் மகன் போரில் களிற்றை வீழ்த்தி தானும் மாண்டான். இச்செய்தியைக் கேட்டு அவள் அவனைப் பெற்ற பொழுது அடைந்த இன்பத்தைவிட பெரிதும் மகிழ்ந்தாள் என்பதை,

**"............... முதியோள் சிறுவன்**

**களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை**

**ஈன்ற ஞான்றினும் பெரிதே"**[4]

என்ற புறப்பாடல் எடுத்துரைக்கிறது. இதிலிருந்து சங்கமகளிரின் வீரமிக்க பெண்ணிய சிந்தனை புலப்படுகிறது. இதனையே வள்ளுவரும்,

**"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்**
**தன்மகனைச்**

**சான்றோன் எனக்கேட்ட தாய்"**[5]

என்று கூறி இருப்பதை அறிய முடிகிறது.

**மகளிரின் மறமாண்பு**

வீரத்தாய் தனது புதல்வன் போரில் புறமுதுகிட்டான் என்ற செய்தியைப் பிறர் கூறக் கேட்டாள். அவள் இச்செய்தியைக் கேட்டவுடன் கண்கள் சிவக்க கோபத்துடன் அவ்வாறாயின் அவன் பாலுண்ட மார்பை அறுத்து எறிவேன் என போர்க்களம் நோக்கி சென்றதை,

**"மண்டுஅமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்டஎன்**

**முலைஅறுத் திடுவென், யான்' எனச் சினைஇக்,**

**கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்,**

**செங்களம் துழவுவோள், சிதைந்துவே றாகிய**

**படுமகன் கிடக்கை காணூஉ,**

**ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே!"6**

என்ற பாடல் எடுத்து இயம்புகிறது. இதிலிருந்து புதல்வனைப் பெற்ற தாய் தன்னுடைய மகன் நாட்டுக்காக உயிர் விடுவதை பெரும்பேறாகக் கருதியதை உணர முடிகிறது.

**வீரத்தாய்மை**

சங்கமகளிர் வீரத்தைத் தனது குடிப்பெருமை யாகக் கருதினர். போருக்குச் சென்ற வீரமகன் பாசறையில் பகைவர்களை அழித்துத் தானும் மாண்டான். அதைக் கண்ட அந்த வீரமறவனின் தாய் மிகவும் மகிழ்ந்தாள். அதனால் அவளின் வற்றிய மார்பகங்களில் இருந்து பால் ஊறிச் சுரந்ததை,

**"வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி,**

**இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய,**

**சிறப்புடை யாளன் மாண்பு கண்டருளி,**

**வாடுமுலை ஊறிச் சுரந்தன -**

**ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே"[7]**

என்ற ஔவையாரின் பாடல் விளக்குகிறது. இப்பாடலில் தாயின் உவகையும், வீரமும், முதிய வயதிலும் தன் மகனை எண்ணியதன் பொருட்டு பால் சுரந்ததால் தாய்ப்பாசமும் வெளிப்படுகிறது.

**தாயின் இன்பவருத்தம்**

முதல்நாள் போரில் கணவன் வீழ்ந்தான். அடுத்தநாள் அவள் மகன் போருக்குச் சென்று பகைவனின் பட்டத்து யானையை வீழ்த்தினான். பகைவனின் அம்புபட்டு தன் கேடயத்தின் மீதே விழுந்து கிடக்கும் தனது இளம்பருவ மகனைக் கண்டு தாய் இன்ப வருத்தம் அடைகிறாள். இதனை,

**"புகர்நிறம் கொண்ட களிறுஅட்டு ஆனான்,**

**முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே, .....**

**தோல்மிசைக் கிடந்த புல்அண லோனே"[8]**

என்ற பாடல் கூறுகிறது. நாட்டுக்காக போரில் தன் குடும்பத்திலுள்ள ஆண்கள் பங்கெடுத்துக் கொள்வதை மூதின் மகளிர் பெருமையாகவும், மகிழ்வாகவும் கருதியதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

**திங்கள் வலித்த கால் அன்னோன்**

பெண்பாற் புலவர்கள் மன்னனின் வீரச் சிறப்பைப் பகைவர் முன்னிலையில் பாடும் வீரமுடையவர்களாக விளங்கி இருக்கின்றனர். நாள்தோறும் எட்டு தேர் செய்யும் தச்சன் ஒரு திங்கள் முயன்று செய்த ஒரு தேர்ச் சக்கரத்தைப் போன்ற வலிமைமிக்கவன் அதியமான் என்பதை,

**"எம்முளும் உளன்ஒரு பொருநன்; வைகல்**

**எண்தேர் செய்யும் தச்சன்**

**திங்கள் வலித்த கால்அன் னோனே"[9]**

என்ற பாடல் குறிப்பிடுகிறது. இப்பாடலில் ஔவையார் தனது மன்னனின் வீரத்தைப் பகைவர் முன் அஞ்சாமல் எடுத்துரைக்கக் கூடிய வீர மகளாக திகழ்வதை அறிய முடிகிறது.

**களிறெறிந்த காளை**

வீரம்மிக்க தாய் தனது மகன் போரில் யானையின் மீது வேற்படையை வீச, அவ்யானையானது வேலோடு தப்பி ஓடியதை கேட்டறிந்தாள் ஒரு வீரப்பெண். அப்போது மகன் வெறுங்கையனாய் வீடு திரும்பினான். இதையறிந்த அத்தாய் இதுவரை இவ்வாறு யானையை போக விட்டு, புறங்காட்டி திரும்பியவன் என் குடியில் யாரும் இல்லை. இப்போது உன்னால் இந்த வசை வந்தடைந்தது.

**"எம்இல் செய்யாப் பெரும் பழி செய்த**

**கல்லாக் காளையை ஈன்ற வயிறே"[10]**

என்று வருந்தி, இவனைப் பெற்ற பாழும் வயிற்றைப் பீறி எறிவேன் எனச் சீறியதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. மேலும், இந்த பாடல் மறக் குடிமகள் தன்குடிப் பெருமையைப் பேசுவதாகவும், பெண்ணின் வீரத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

**“கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்**

**மெய்வேல் பறியா நகும்”[11]**

என்று வள்ளுவரும் களிறு எறிந்த வீரனின் சிறப்பைக் குறிப்பிடுகிறார். வீரன் ஒருவன் தனது வேலை யானை மீது எறிய அஃது அடிபட்டு கீழே விழுந்தது. அப்போது மற்றொரு யானை அவ்வீரனைத் தாக்க வந்தது. அதனைத் தாக்க வேலின்றி, அந்த வீரன் தனது மார்பில் பாய்ந்த வேலைப் பறித்து யானை மீது எறிந்தான். உயிரே போனாலும் வீரத்தோடு யானையைத் தாக்கிய வீரனின் வலிமை இக்குறளில் கூறப்படுகிறது.

**அஞ்சாத பெண்மை**

அச்சம் இல்லாத பெண்மையின் வெளிப் பாட்டினைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. பரிசில் வழங்க தாமதித்த அதியமானின் வாயிற்காவலனிடம் அவனது செயல் குறித்து,

**“மரம்கொல் தச்சன் கைவல் சிறாஅர்**

**மழுவுடைக் காட்டகத்து அற்றே -**

**எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே”[12]**

என்று ஔவையார் கூறும்போது அதில் அவரின் அச்சமில்லா பெண்மை வெளிப் படுகிறது.

**நடுகல் வணக்கம்**

போரின் காரணமாக மகளிர்க்கு ஏற்படும் மனநிலையை மூதின்முல்லை பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**“ஒலிமென் கூந்தல் ஒள்நுதல் அரிவை**

**நடுகல் கைதொழுது பரவும், ......**

**…………………. வேந்தனொடு**

**நாடுதரு விழுப்பகை எய்துக எனவே”[13]**

என்பது அள்ளூர் நன்முல்லையாரின் பாடலாகும். இதில் போர் மூண்டால் அப்போரில் கணவன் வெற்றி பெறுவான் என்ற முதுகுடிப் பெண்ணின் உறுதியான நம்பிக்கை வழிபாடாக வெளிப்படுகிறது.

**முடிவுரை**

சங்ககால மக்களின் புறவாழ்க்கையில் முதன்மை பெறுவது வீரம். மகளிர் போரில் தான் நேரடியாக பங்கெடுக்கவில்லை என்றாலும், தனது ஆண்மக்களை வீரத்தோடு போருக்கு அனுப்பி உள்ளம் பூரிப்படைந்ததை பல புறப்பாடல்கள் பதிவு செய்துள்ளன. அதேபோல் பெண்கள், மன்னனாயினும் அஞ்சா நெஞ்சுடன் தனது கருத்தை வெளிப் படுத்துபவர்களாக இருந்திருக்கின்றனர். சிந்தையில் அன்போடு வீரத்தையும் எண்ணி வாழ்ந்த மூதின்மகளிரின் வீரச்சிறப்பு குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. பு.வெ.மாலை உரை, புலியூர் கேசிகன், பக்-144
2. புறம். பா-279
3. புறம். பா-86
4. புறம். பா-277
5. குறள்- 69
6. புறம். பா-278
7. புறம். பா.295
8. புறம். 310
9. புறம்.87
10. தமிழர் வீரம், ரா.பி.சேதுப்பிள்ளை,பக்-88
11. குறள்- 774
12. புறம். பா-206
13. புறம். பா- 306

**துணைநூற் பட்டியல்**

1. புலியூர்கேசிகன் (உரை.). புறப்பொருள் வெண்பாமாலை. சென்னை: சாரதா பதிப்பகம், 2010.
2. சுப்பிரமணியன், ச.வே. (உரை.). சங்க இலக்கியம்: எட்டுத்தொகை (மூலமும் தெளிவுரையும்), புறநானூறு. சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2010.
3. திருவள்ளுவர். திருக்குறள் (பரிமேலழகர் உரை). சென்னை: பூம்புகார் பதிப்பகம், 2014.
4. சேதுப்பிள்ளை, ரா. பி. தமிழர் வீரம். சென்னை: பழனியப்பா பிரதர்ஸ், 2008.
5. சுப்பிரமணியன், ச.வே. (உரை.). புறநானூறு (மூலமும் தெளிவுரையும்). சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2010.